TCC

அமைப்பு:  தமிழ் சமூக மையம்
பொறுப்பு: நிறைவேற்று இயக்குனர்
வகைப்பாடு: 2 வருட முழுநேர ஒப்பந்தம்
இடம்: கலப்புவகை, ரொரன்றோ, ஒன்றாரியோ
மேற்பார்வை: இயக்குனர் சபை
வெளியிடும் தேதி: 26 செப்டம்பர் 2022

தசமையின் நோக்கம்:
பன்முகப்பட்ட தமிழ்க் குமுகத்தின் தற்போதைய தேவைகளையும் வளர்ந்துவரும் தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கான வெளிகளையும் சேவைகளையும் உள்ளடக்கிய, இயக்காற்றல் மிக்க, புத்தாக்கமுடைய, பலநோக்குடைய மதச்சார்பற்ற நிலையமாக விளங்குதல்.

விவரம்:
இயக்குனர் சபைக்கு அறிக்கை அளிக்கும் நிறைவேற்று இயக்குனர், தசமையின் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பவராக இருந்து, மையத்தின் நிதித்திட்டம், அமைப்பியல், செயற்பாடு ஆகியன தொடர்பான தேவைகளையும் இலக்குகளையும் எட்டுவதற்கான முன்னெடுப்புகளைச் செயற்படுத்துவார். மையத்தின் ஆணையை முன்னகர்த்துவதற்கான குறுகியகால மற்றும் நீண்டகால இலக்குகளை எதிர்வுகண்டு அவற்றைச் செயற்படுத்தவென நிறைவேற்று இயக்குனரானவர் பணித்துணைவர் குழுவுடனும், தன்னார்வத் தொண்டர்களுடனும், செயற்குழுக்களுடனும், இயக்குனர் சபையுடனும் நெருக்கமாகப் பணியாற்றுவர். நிறைவேற்று இயக்குனரானவர் பணித்துணையாளர்களை மேலாண்மை செய்வார். ஒத்துழைப்பும் ஒத்துணர்வும் மிக்க செயற்பாட்டுச் சூழலை உருவாக்குவார். குமுக உறவாடல், நிதிதிரட்டற் திட்டங்கள், வரவுசெலவுத்திட்ட உருவாக்கம், நிதிநிலை ஆகிய விடயங்களை மேற்பார்வை செய்வார், நிதிவழங்கும் அமைப்புகள், நிலையங்கள், நிறுவனங்கள், கொடையாளர்கள் ஆகியோருடன் உறவாடுவதோடு புதிய ஆதரவாளர்களையும் விருத்தி செய்வார்.

பொறுப்புகள்:

1. தலைமைத்துவம்
    - செயற்பாடுகளின் சிறப்பையும், செயற்றிட்டங்களின் கவனமிக்க மதிப்பாய்வுகளையும், நிர்வாகம், நிதிதிரட்டல், தொடர்பாடல், செயற்பாட்டுப் பொறிகள் ஆகியவற்றின் நிலையான தரத்தையும் உறுதிசெய்தல்.

- தசமையின் தன்னார்வத்தொண்டர்கள், இயக்குனர் சபை அங்கத்தவர்கள், நிகழ்ச்சிச் செயற்குழுக்கள், பங்காளி அமைப்புகள், கொடையாளர்கள் ஆகியோருடன் தொடர்பாடல்.
- பலம்வாய்ந்ததொரு இயக்குனர் சபையை உருவாக்கி, பேணி, ஆதரவளிக்க உதவுவதோடு, அனைத்து நிலைக்குழுக்களினதும் பதவிமுறை அங்கத்தவராகப் பணியாற்றல்.
- இயக்குனர் சபைக்கும், நிதி வழங்குனர்களுக்கும், ஏனைய பங்காளிகளுக்கும் முன்னேற்றங்களைத் தெளிவாக அறிவிக்கும் வகையிலே முன்னடைவுகளை அளவிடுவதற்கான காத்திரமான படிமுறைகளை உறுதிப்படுத்துவதோடு, செயற்பாடுகளின் கூறுகளைக் கிரமமான முறையிலே மதிப்பாய்வுக்குட்படுத்தல்.
- செயற்றிட்டத்தின் வெற்றிகரமான நிறைவேற்றத்திற்கென பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிபுணர்களுடன் தொடர்பாடி அவர்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- தசமையின் ஆற்றல்மிகு தன்னார்வத் தொண்டர்களை உள்வாங்கி, பயிற்றுவித்து, நெறிப்படுத்தல்.

2. நிதிதிரட்டல் மேலாண்மை
    - தமிழ் சமூக மையத்தின் வளர்ச்சிக்கான நிதியைத் திரட்டுவதற்கான உத்திகளையும் திட்டங்களையும் நிதிதிரட்டல் செயற்குழுவுடன் இணைந்து உருவாக்குதல்.
    - அனைத்து நிதிதிரட்டல் நிகழ்வுகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதோடு, அவற்றின் வெற்றிகளை கூர்ந்து அவதானித்தல்.
    - வருடாந்தக் கொடை, பெருந்தொகைக் கொடை, குமுகக் கொடை, நேரடியான மின்னஞ்சல் பரப்புரைகள் ஆகியவற்றைச் நடைமுறைப்படுத்துவதோடு மேற்பார்வை செய்தல்.
    - அனைத்து கொடையாளர்களுடனான உடனடியானதும் இணக்கவணக்கமானதுமான தொடர்பாடலை - முறையான பற்றுச்சீட்டு வழங்கல் மற்றும் நன்றிதெரிவித்தல் உள்ளிட்ட விடயக்களிலே – உறுதிசெய்தல்.

3. இயக்குனர் சபை மற்றும் செயற்குழு ஆளுகை
    - இயக்குனர் சபைக்கும், அனைத்து உபகுழுக்கழுக்கும் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளிலும் உதவி வழங்குதல்.
    - இயக்குனர் சபைத் தலைவருடன் ஒருங்கிணைந்து, இயக்குனர் சபைக் கூட்டங்களுக்கான கூட்ட ஒழுங்குமுறையையும் தகவல் வழங்குதலையும் திட்டமிட்டு உருவாக்குதல்.
    - அமைப்பைப் பாதிக்கும் உள்ளக வெளியக விடயங்களை இனங்கண்டு, மதிப்பாய்ந்து இயக்குனர் சபைக்குத் தெரியப்படுத்துதல்.

- அமைப்பின் செயற்பாடுகள் பற்றி இயக்குனர் சபைக்கு அறிக்கை அளித்தல்.

4. செயற்பாட்டு மேலாண்மையும் நிதி மேலாண்மையும்
    - அமைப்பின் திறமையானதும் பயன்மிக்கதுமான அற்றாடச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
    - தசமை எதிர்காலத்திலும் தனது குறிக்கோளை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கான வினைமுறைத் திறத் திட்டமிடலுக்குப் பொறுப்பேற்றல்
    - அங்கீகரிக்கப்பட்ட நிதித்திட்டத்திற்குட்பட்டுச் செயற்படல், வளங்களின் முழுமையான பயன்பாட்டை உறுதிப்படுத்துதல், அமைப்பை நேர்மறையான நிதிநிலையிலே பேணுதல் ஆகிய விடயங்களைப் பொதுவாக எதிர்பார்க்கும் வகையிலே பொறுப்பான நிதிநிலை மேலாண்மையை வழங்கல்.
    - தசமையின் மதிப்புத்தோற்றத்தை மேம்படுத்தும் வகையிலே குமுகத்திலே வெளிப்படையுடன் ஈடுபடுதல்.
    - அமைப்பின் செயற்பாடுகளின் இயக்கநிலையை உறுதிசெய்யும் வகையிலே பொருத்தமான வளங்களைப் பயன்படுத்தி மேற்பார்வை செய்தல்.
    - அமைப்பின் சார்பாக ஏற்படுத்தப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்புகள், ஒப்பந்தங்கள், உள்ளிட்ட கருவிகளை மீளாய்வு செய்து பரிந்துரைப்பதற்குப் பொறுப்பாக இருத்தல்.
    - அமைப்பின் அனைத்து நிர்வாக மற்றும் நிதியியல் பொறிமுறைகளைப் பராமரித்து, தேவையான அறிக்கைகளும் ஆவணங்களும் பிழையின்றியிருப்பதையும், சரியான காலத்தில் பூர்த்திசெய்யப்படுவதையும் உறுதிசெய்தல்.
    - எதிர்கால அடைவுகளுக்கு முக்கியமான முறையான கொள்கைகளையும் செயன்முறைகளையும் உருவாக்குதல்.
    - அமைப்பானது இயலுமானவரையான உச்சநிலை ஒழுக்கவிழுமியங்களைப் பேணுகிறது என்பதை உறுதிசெய்தல்.
    - சரியான – கொள்கை சார்ந்த, குழு நடவடிக்கைகள் சார்ந்த, அல்லது செயற்றிட்டங்கள் சார்ந்த - நிறுவனமயமான மாற்றங்களுக்கு ஆதரவாகப் பரிந்துரைத்தல்.

தகைமைகள்:

- இலாப நோக்கற்ற துறையிலே மேல்நிலை மேலாளராக 5 வருடங்கள் பணியாற்றிய பட்டறிவு விரும்பத்தக்கது.
- தமிழ் குமுகத்தையும், அதன் பலங்களையும், தேவைகளையும் பற்றிய ஆழமான அறிவு.
- நிதி மேலாண்மை, வினைமுறைத்திறன்சார் சிந்தனை, செயற்றிட்ட மேலாண்மை ஆகியன தொடர்பான அதீத திறமை.

- நிதிகோரல் விண்ணப்பங்கள் மற்றும் நிதிதிரட்டல் தொடர்பான சாதகமான பட்டறிவு.
- இலாபநோக்கற்ற ஆளுகை மற்றும் இலாபநோக்கற்றமை தொடர்பான சட்டதிட்டங்கள் பற்றிய ஆழமான அறிவு.
- நிதிநிலை சார்ந்து தக்கவைக்கும் தன்மையைப் பேணும் உறுதிப்படுத்தப்பட்ட தேர்ச்சி.
- ஒருங்கிணைவுள்ளதும் பன்முகப்பட்டதுமான பணியிடச்சூழலை ஆதரிக்கும் உறுதிப்படுத்தப்பட்ட இயல்பு.
- மிகச்சிறந்த தனிநபர் ஊடாடற் திறமைகள்.
- வாய்மொழிமூலமும் எழுத்து மூலமுமான மிகச்சிறந்த தொடர்பாடற் திறன்.
- எழுத்துமூலமாகவும், வாய்மொழிமூலமாகவும் தமிழ் மொழியிலே தொடர்பாடும் வல்லமை மிகுந்த சாதகமானது.

மேலதிக விபரங்கள்:
ஏதிர்பார்க்கக்கூடிய சம்பளம் 90,000 டொலர்கள் முதல் 100,000 டொலர்கள் வரை எனினும் விண்ணப்பதாரரின் பட்டறிவு நிலை சார்ந்து பேரம் பேசப்படலாம். வாரத்துக்கு, வார இறுதிநாட்கள் மாலைநேரங்களை உள்ளடக்கிய, 35 மணிநேரங்களைப் பணி கோருகிறது.

விண்ணப்பிக்கும் முறை:
இந்தப் பணிவெற்றிடம் சார்ந்த உங்கள் ஆர்வத்தையும் அதற்கு உங்களைத் தகுதியுடையவராக்கும் உங்கள் பின்புலத்தையும், தற்குறிப்பையும், முக்கியமானதென நீங்கள் கருதும் மேலதிக விபரங்களையும் ஒக்டோபர் 16, 2022க்குப் பிந்தாமல் info@tamilcentre.ca என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.